முதலாவது தேர்ச்சி : இறைத்திட்டத்தை விளங்கி அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்

5

## 1.5. இறைவார்த்தையில் வலிமை பெறுவோம்

கீழே தரப்பட்டுள்ள பாடலைக் கவனத்தோடும் பக்தியோடும் பாடவும்.

**ஆண்டவரின் ஆவி என்மேலே**

ஆதிமுதல் அனைத்தையும் ஆளும்
பரமனின் ஆவியே வருக.
ஆண்டவன் பாருக்கு வாக்களித்திட்ட
பரிசுத்த ஆவியே வருக

பொய்மிகு போதகம் மலிந்திடும்
உலகினைப் பிழைநீக்கிக் காத்திட வருக.
பரமனின் வார்த்தைக்கு பிழையாய்ப் பொருள் தரும்
பாரினைக் காத்திட வருக.

தவறிடும் உலகினில் தாய்த் திருச்சபை தனை
தவறாமல் காத்திட வருக
தேவனின் பிரதிநிதி திருமறை ஆள
தவறா வரம் தர வருக.


கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1. கிறிஸ்தவர்களின் புனித நூல் எது?
2. அப் புனித நூலில் என்ன அடங்கியுள்ளது?
3. இறைவார்த்தைக்கு செவி சாய்ப்பதால் எமக்கு என்ன கிடைக்கிறது?
4. இப்பாடல் வழியாக உமக்கு தரப்படும் வழிகாட்டல்கள் யாவை?

திருவிவிலியத்தில் அடங்கும் இறைவார்த்தைகள் வழியாக இறைவன் எம்முடன் உரையாடுவதோடு எமக்கு வலிமை, ஊட்டம், வல்லமை தருகிறார். இதில் மிகவும் முக்கிய விடயம் யாதெனில் திருவிவிலியமானது எல்லாக் காலத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்க எழுத்தாக்கமாயிருப்பதே.

இறைவார்த்தையை வாசிப்பதன் வழியாக எமக்கு வல்லமை, வலிமை, ஆறுதல் கிடைக்கிறது. அந்த அதிகாரத்தை வலிமையை, ஆறுதலை எமது உள்ளத்திலே நிலைக்கச் செய்பவர் தூய ஆவியானவராகும்.

யேசுவின் சீடர்கள் அவரது வார்த்தையைக் கேட்டு அதனை மற்றவர்களுக்கு அறிவிப்பதற்கு தூய ஆவி அவர்களிலிருந்து அவர்களை வழிநடத்தினார்.



இறைவார்த்தையை மனப்பாடமாக அல்லது கவனமற்று வாசிக்காது, அதிலுள்ள விடயங்களைப் புரிந்து கொள்வதற்காக தியானத்தோடு வாசியுங்கள். இறைவார்த்தை எம் வாழ்வில் செயல்படுவதற்காக தூய ஆவிக்கு எமது உள்ளத்தைத் திறந்து வைக்கவேண்டும். அதன்பின்னர் அதன் ஊடாக இறைவார்த்தைகேற்ப வாழ வேண்டியது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும்.

தலைவராகிய ஆண்டவர் கூறுகின்றார்; ''இதோ! நாள்கள் வரப்போகின்றன! அப்போது நாட்டினுள் பஞ்சத்தை அனுப்புவேன்; அது உணவு கிடைக்காத பஞ்சமோ, நீரில்லாத வறட்சியோ அன்று; ஆண்டவரின் வாக்கு கிடைக்காத பஞ்சமே அது.

ஆமோஸ் 8:11

அதற்கு இயேசு அவர்களிடம், உங்களுக்கு மறைநூலும் தெரியாது, கடவுளின் வல்லமையும் தெரியாது. இதனால்தான் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்.

மாற். 12:24

மேற்கண்ட வாசகங்கள், இறைவார்த்தை எமது வாழ்வில் மிகவும் முக்கியமானது என்பதைக் காட்டுகிறது.



அவர் மீண்டும் கடலோரத்தில் கற்பிக்கத் தொடங்கினார். மாபெரும் மக்கள் கூட்டம் அவரிடம் ஒன்றுகூடி வர, அவர் கடலில் நின்ற ஒரு படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் இருந்தனர். அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றை அவர்களுக்குக் கற்பித்தார். அவர் அவர்களுக்குக் கற்பித்தது: இதோ, கேளுங்கள், விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைக்கும் பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன. வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேர் இல்லாமையால் கருகிப் போயின. மற்றும் சில விதைகள் முட்செடிகளிடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிடவே, அவை விளைச்சலைக் கொடுக்கவில்லை. ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்து வளர்ந்து, சில முப்பது மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில நூறு மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.

மாற்கு 4: 1 - 9

- ஆசிரியரின் ஆலோசனைப்படி சிறிய குழுக்கள் அமைத்தல்.
- அக்குழுக்களுக்கு செயற்பாட்டுப் படிவத்தை அளித்து அதற்கேற்ப கலந்துரையாடலுக்கு ஈடுபடுத்தல்.
- கலந்துரையாடிய முக்கிய விடயங்களை அனைத்துக் குழுக்களுக்கும் அளித்தல்.

செயற்பாடு :

01. i) வழியோரம் விழுந்த விதைகள் என்பதன் கருத்து யாது?
ii) அதனால் உமக்கு தரப்படும் செய்தி யாது?
iii) நல்ல பயன் கொடுக்க வேண்டுமாயின் உம்மால் செய்ய வேண்டியவைகள் 2 எழுதுக.

02. i) பாறைப் பகுதிகளில் விழுந்த விதைகள் என்பதன் கருத்து யாது?
ii) அதனால் உமக்கு தரப்படும் செய்தி யாது?
iii) நல்ல பயன் கொடுக்க வேண்டுமாயின் உம்மல் செய்ய வேண்டியவைகள் 2 எழுதுக.

03. i) முட்செடிகளிடையே விழுந்த விதைகள் என்பதன் கருத்து யாது?
ii) அதனால் உமக்கு தரப்படும் செய்தி யாது?
iii) நல்ல பயன் கொடுக்க வேண்டுமாயின் உம்மல் செய்ய வேண்டியவைகள் 2 எழுதுக.

04. i) நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் என்பதன் கருத்து என்ன?
ii) அதனால் உமக்குத் தரப்படும் செய்தி யாது?

அவர்கள் பூட்டிய தளைகளைத் தகர்ப்போம்: அவர்கள் வைத்த கண்ணிகளை நம்மிடமிருந்து அறுத்தெறிவோம் என்கின்றார்கள். விண்ணுலகில் வீற்றிருப்பவர் எள்ளி நகைக்கின்றார்: என் தலைவர் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்கின்றார்.

தி.பா. 2:3-4

‘‘நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார்; தாம் கேட்பதையே பேசுவார்; வரப்போகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார். இவ்வாறு அவர் என்னை மாட்சிப்படுத்துவார். தந்தையுடையவை யாவும் என்னுடையவையே. எனவேதான் ‘‘அவர் என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார்’’ என்றேன்.

யோவா 16:12 - 15

மேற்காணப்படும் விவிலியப் பகுதியை நன்கு வாசித்து அறிந்து கொள்ளவும்

இறைவார்த்தையிலுள்ள உண்மையை தூய ஆவியானவர் எமக்கு தெளிவுபடுத்துகிறார். பெந்தகோஸ்து தினமன்று தூய ஆவியின் வல்லமையால் நிறைவு பெற்ற திருத்தூதர் இறைவார்த்தையை பல்வேறு மொழிகளில் மக்களுக்கு போதித்தனர்.

- மறைநூலில் இறைவார்த்தை உருப்பெற்றிருப்பதை இயேசு ஏற்றுக் கொண்டார்.
- மறைநூலைக் கற்றார்.
- இறைவார்த்தையைப் போதித்தார்.
- இறைவார்த்தையின்படி வாழ்ந்தார்.

கிறிஸ்துவைப் பின்பற்றும் நாமும் அவரைப் போல் இறைவார்த்தையை ஏற்றுக்கொண்டு அதனை அடிக்கடி வாசித்து அதற்கேற்ப வாழ்ந்து மற்றவர்களும் அதனை அறிந்து கொள்வதற்கு ஆவன செய்யவேண்டும்.

விடையளிக்கவும் :-

1. விதைப்பவர் உவமையை எழுதி அதன் மூலம் உமது வாழ்விற்கு பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் 03 எழுதுக.
2. இறைவார்த்தையைப் பற்றி குறிப்பிடப்படும் ஐந்து பாடல்களின் முதல் வரிகளை எழுதுக.
3. உமது வீட்டில் திருவிவிலியத்துக்கு மதிப்பு அளிக்கக் கூடிய முறையை எழுதிக் காட்டுக.
4. ஒவ்வொரு நாளும் பாடசாலை செல்வதற்கு முன் திருவிவிலியத்தில் ஒரு பகுதியை வாசித்து அதற்கேற்ப உமது பாடசாலையிலே எவ்வாறு ஒரு கிறிஸ்தவப் பிள்ளையாகச் செயற்படுவீர் என எழுதுக.
5. இறைவார்த்தையை வாசிப்பதன் மூலம் உமது வாழ்வு வலிமை பெற்ற விதத்தை ஆறு வாக்கியங்களில் விளக்குக.

**வாழ்க்கைக்கு:-**
தினமும் திருவிவிலியத்தில் ஓர் பகுதியை வாசித்து தியானிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

முதலாவது தேர்ச்சி : இறைத்திட்டத்தை விளங்கி அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்

6

## 1.6. இறைத்திட்டத்தில் திருச்சபையின் உதயம்



''எனவே நான் உனக்குக் கூறுகின்றேன்
உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின் மேல்
என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின்
வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா'' என்றார்.

(மத்.16:18)